ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 12) Dec 2007



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப் பொருள்கள் முன்னமே கைக் கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப் பொருளும் கொண்டாரே.

## உட்பொதிவு


1. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. திருமாலை

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீரங்கராஜஸ்தவம்
## (பகுதி – 12)

111. மலயஜ சசி லிப்தம் மாலதி தாம தல்பம்
ஸு மணி ஸர விதாநம் கௌஸ்துப ஸ்வஸ்தி தீபம்
தனுஜ வ்ருஷ விஷாண உல்லேக சித்ரம்ச லக்ஷ்மீ
லலித க்ருஹம் உபாஸே ரங்கஸர்வம்ஸஹ உர:

பொருள் – (பெரியபெருமாளின் திருமார்பைக் கூறுகிறார்) சந்தனம் மற்றும் பச்சைக்கற்பூரம் கொண்டு பூசப்பட்டது, மாலதி மலர்மாலை இதன் மீது படுக்கை போன்று விரிக்கப்பட்டுள்ளது, உயர்ந்த இரத்தினக்கற்கள் மாலையாகக் கோர்த்துக் கட்டப்பட்ட மேற்கூரை கொண்டது, கௌஸ்துபம் என்னும் மங்களகரமான தீபம் ஏற்றப்பட்டது, அசுரர்களின் எருதுகளுடைய கொம்புகளின் அடையாளங்களை ரேகைகள் போன்று உடையது, ஸ்ரீரங்கநாச்சியார் சயனிக்கும் இடமாக உள்ளது – இப்படிப்பட்ட பெரியபெருமாளின் திருமார்பை நான் உபாஸிக்கிறேன்.

112. ஹார ஸ்ப்பாரித பேநம் அம்சு லஹரீ மாலா ருத்தி முக்தாபல
ச்ரேணீ சீகர துர்த்திநம் தத இதோ வ்யாகீர்ண ரத்ந உத்கரம்
ஆவி: கௌஸ்துப லக்ஷ்மி ரங்கவஸதே: நிஸ்ஸீமபூம அத்புதம்
வக்ஷ: மந்த்ர மத்ய மாநஜலதி ச்லாகம் விலோகேமஹி

பொருள் – (பெரியபெருமாளின் திருமார்பைக் கூறுகிறார்) முத்து மாலைகள் என்னும் வெண்மையான நுரைகளை உடையது, காந்திகள் என்னும் அலையானது வீசியபடி உள்ளது, முத்துக்கள் ஆங்காங்கே நீர்த்துளிகள் போன்று காணப்படுகின்றன, எங்கு பார்த்தாலும் இரத்தினக்கற்கள் சிதறியபடி உள்ளன, கௌஸ்துப மணியும், பெரியபிராட்டியும் தோன்றும் இடமாக உள்ளது, அளவிட இயலாத பெருமைகள் காரணமாக அற்புதமாக உள்ளது, மந்த்ர மலையால் கடையப்பெற்ற திருப்பாற்கடல் போன்றுள்ளது – இப்படிப்பட்ட பெரியபெருமாளின் திருமார்பை நாம் வணங்குவோமாக.

விளக்கம் – இங்கு திருபாற்கடலின் பல தன்மைகளை பெரியபெருமாளின் திருமார்பிற்கு ஒப்புமையாகக் கூறுகிறார். கடலில் உள்ள வெண்மை போன்று, இவன் மீது உள்ள முத்து மாலைகளைக் கூறினார். கடலில் நீர்த்துளிகள் சாரலாக வீசுவது போன்று, இவன் மீது முத்துக்கள் உள்ளன. கடலில் இரத்தினங்கள் கிட்டுவது போன்று, இவன் திருமார்பில் இரத்தினக்கற்கள் பரவலாக உள்ளன. திருப்பாற்கடலில் கௌஸ்துபமும், மஹாலக்ஷ்மியும் தோன்றியது போன்று, இவன் திருமார்பிலும் காணலாம். திருப்பாற்கடல் எவ்விதம் எல்லையற்றதாக உள்ளதோ, அது போன்று இவன் திருமார்பும் பரந்து உள்ளது.

113. வக்ஷஸ்த் ஸ்தல்யாம் துளஸி கமலா கௌஸ்துபை: வைஜயந்தீ
ஸர்வ ஈசத்வம் கதயதி தராம் ரங்கதாம்ந: தத் ஆஸ்தாம்
கூர்மவ்யாக்ரீ நக பரிமிலத் பஞ்சஹேதீ யசோதா
நத்தா மௌக்த்ய ஆபரணம் அதிகம் ந: ஸ்மாதிம் திநோதி

பொருள் – (பெரியபெருமாளின் திருமார்பை மேலும் அனுபவிக்கிறார்) பெரியபெருமாளின் பரந்த திருமார்பில் துளசி மாலைகள், ஸ்ரீரங்கநாச்சியார், கௌஸ்துபம் ஆகியவற்றுடன் அழகிய வைஜயந்தீ என்னும் வனமாலை உள்ளது. இந்த மாலை – இவனே அனைவருக்கும் ஈச்வரன் – என்று பறை சாற்றுவது போன்றுள்ளது. யசோதையால் கண்ணன் கழுத்தில் கட்டப்பட்ட ஆமைநகம்,

புலிநகம் ஆகியவற்றுடன் சேர்க்கப்பட்ட பஞ்சாயுத ஆபரணம் அழகாக விளங்குகிறது. அந்த ஆபரணம் நம்மை மேலும் மகிழும்படிச் செய்கிறது.

114. கியாந் பர: மம ஜகத் அண்ட மண்டலீ இதி
அத்ருப்தித: க்ருசிதம் இவ உதரம் விபோ:
ரிரக்ஷிஷா உசித ஜகதீ பரம்பராம்
பராம் இவ ப்ரதயதி நாபி பங்கஜம்

பொருள் – (பெரியபெருமாளின் திருவயிற்றையும், திருநாபிக் கமலத்தையும் கூறுகிறார்) ப்ரளயத்தின்போது அனைத்து அண்டங்களையும் பாதுகாப்பாக எனது வயிற்றில் வைத்திருந்ததால், எத்தனை பாரமாக இருந்தது – என்று பெரியபெருமாளின் திருவயிறு மனக்குறை கொண்டுள்ளது போன்று, இளைத்துக் காணப்படுகிறது. அதனை உணர்ந்த அவனது திருநாபியானது, தான் ஸ்ருஷ்டி காலத்தில் அனைத்து உலகையும் மீண்டும் படைக்க இருந்த விதத்தை நினைவூட்டி அவனை மகிழவைக்கிறது.

115. த்ரிவித சித் அசித் ப்ருந்தம் துந்த அவலம்பி வலி த்ரயம்
விகணயத் இவ ஐச்வர்யம் வ்யாக்க்யாதி ரங்கமஹேசிது:
ப்ரணத வசதாம் ப்ரூதே தாமோதரத்வ கர: கிண:
தத் உபயகுண ஆக்ருஷ்டம் பட்டம் கில உதரபந்தநம்

பொருள் – (பெரியபெருமாளின் திருவயிற்றில் உள்ள மூன்று மடிப்புகளைக் கூறுகிறார்) பெரியபெருமாளின் திருவயிற்றில் உள்ள மூன்று மடிப்புகள் சேதன அசேதனங்கள் என்னும் மூன்று ஐச்வர்யங்களைக் கூறுவதாக உள்ளது (சேதனங்கள் முன்று = பத்தர், நித்யர், முக்தர், அசேதனங்கள் மூன்று = மிச்ரஸத்வம், ஸத்வசூந்யம், சுத்தஸத்வம்). அந்தத் தழும்புகள் தாமோதரனாக யசோதையிடம் கட்டப்பட்டு நின்றதை உணர்த்துகின்றன (அந்தக் கயிற்றின் தழும்புகள் என்று கருத்து), இதன் மூலம் தான் தன்னிடம் அன்புடன் உள்ளவர்களுக்கு வசப்பட்டவன் என்பதை உணர்த்துவதாக உள்ளது. இந்த இரண்டு தன்மைகளும் பெரியபெருமாளின் பரத்வம் மற்றும் ஸௌலப்யத்தை உணர்த்துவதாக உள்ளன. இந்த இரண்டு குணங்களுக்கும் கட்டப்பட்ட பட்டம் போன்று, அந்தத் திருவயிற்றில் கட்டப்பட்ட உதரபந்தனம் என்னும் ஆபரணம் உள்ளது.

116. த்ரய: தேவா: துல்யா: த்ரிதயம் இதம் அத்வைதம் அதிகம்
த்ரிகாத் அஸ்மாத் தத்த்வம் பரம் இதி விதர்க்காந் விகடயந்
விபோ: நாபீபத்ம: விதிசிவ நிதாநம் பகவத:
தத் அங்யத் ப்ரூ பங்கீ பரவத் இதி ஸித்தாந்தயதி ந:

பொருள் – (பெரியபெருமாளின் திருநாபிக் கமலத்தைக் கூறுகிறார்) மூன்று மூர்த்திகளும் (ப்ரம்மன், விஷ்ணு, சிவன்) எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளும் இல்லாதவர்கள், ஒரே பெருமையைக் கொண்டவர்கள் என்னும் வாதம், மூன்று மூர்த்திகளும் வேறுவேறு அல்ல, ஒன்றே என்னும் வாதம், இந்த மூன்று மூர்த்திகளைக் காட்டிலும் வேறுபட்டதான உயர்ந்த ப்ரஹ்மம் ஒன்று உள்ளது என்னும் வாதம் – இப்படிப்பட்ட விதண்டாவாதங்களை பெரியபெருமாளின் திருநாபிக் கமலம் அடியுடன் அழிக்கிறது. இதன் காரணம் என்னவென்றால், இதுவே ப்ரம்மனுக்கும் ருத்ரனுக்கும் வேர்கிழங்கு போன்று உள்ளது. இந்த திருநாபிக் கமலம் – இவனைத் தவிர்ந்த பொருள்கள் அனைத்தும், இவனது புருவ நெறிப்பிற்கு வசப்பட்டவையே – என்று நமக்குத் தெளிவாகக் காட்டித் தருகிறது.

117. கர்ப்பே க்ருத்வா கோப்தும் அநந்தம் ஜகத் அந்த:
மஜ்ஜத் ப்ரம்யா வாஞ்ச்சதி ஸாம்யம் நனு நாபி:
உத்க்ஷிப்ய ஏதத் ப்ரேக்ஷிதும் உத்யத் ப்ரமி பூயம்
நாபீபத்ம: ரம்ஹதி ரங்க ஆயதந அப்தே:

பொருள் – (திருநாபி மற்றும் திருநாபிக் கமலம் ஆகிய இரண்டையும் அனுபவிக்கிறார்) கடல் போன்றுள்ள பெரியபெருமாளின் திருநாபியானது, அளவற்ற இந்த உலகத்தைத் தன்னுள் அடக்கிக் காப்பதற்காக, உள்நோக்கி இழுக்கின்ற சுழி போன்று உள்ளது. அந்தச் சுழி போன்ற தன்மையை விரும்புவதாகவும் அந்த திருநாபி உள்ளது. இப்படியாக உள்ளடக்கப்பட்ட உலகங்கள் பாதுகாப்பாக

உள்ளனவா என்று மேலே நின்று காண்பதற்காக, மேல் நோக்கிக் கிளம்பும் சுழியாக, பெரியபெருமாளின் திருநாபிக் கமலம் உள்ளது.

விளக்கம் – இங்கு பெரியபெருமாளின் திருநாபிக் கமலத்தை பட்டர் கூறுவது காண்க. இதே போன்று ஆண்டாளும் – எழு கமலப் பூவழகர் – என்று தன்னுடைய நாச்சியார் திருமொழியில் கூறியதும் காண்க. ஆனால் இன்று பெரியபெருமாளின் திருநாபியில் வெளிப்படையாகக் காணும்படி தாமரை இல்லை. இல்லாத ஒரு வஸ்துவைக் குறித்துக் கூற ஆண்டாளும், பட்டரும் துணிந்திருக்க மாட்டனர். இவற்றை வைத்துப் பார்க்கும்போது, பெரியபெருமாளின் திருநாபியிலிருந்து திருக்கமலம் போன்ற அமைப்பு இருந்திருக்கவேண்டும். அந்த அமைப்பு காலத்தின் வெள்ளத்தில் மறைந்திருக்கலாம் என்பது அடியேனின் தாழ்மையான அபிப்ராயம். விஷயம் அறிந்தவர்கள் இதனை சற்று ஆராயலாம்.

118. மதம் இவ மதுகைடபஸ்ய ரம்பா கரபகரீந்த்ரகர ஆபிரூப்யதர்ப்பம்
ஸ்ப்புடம் இவ பரிபூய கர்வ குர்வோ: கிம் உபமிமீமஹி ரங்க குஞ்ஜர ஊர்வோ:

பொருள் – (பெரியபெருமாளின் திருத்தொடைகளைக் கூறுகிறார்) மது மற்றும் கைடபர்களின் கொழுப்பை அடக்கியது, வாழைத்தண்டு, கையின் மணிக்கட்டு தொடங்கி சுண்டுவிரல் வரையில் உள்ள பகுதி, யானையின் துதிக்கை போன்றவற்றின் அழகு கொண்டது, இந்த அழகு காரணமாக வந்த கர்வத்தாலும் மகிழ்வாலும் பருத்து உள்ளது. இப்படிப்பட்ட பெரியபெருமாளின் திருத்தொடைகளுக்கு நான் எந்தப் பொருளை உவமையாகக் கூறுவேன்?

விளக்கம் – இங்கு பட்டர் எந்தப் பொருளையும் உவமையாகக் கூறவில்லை என்பதை உணரவேண்டும். வாழைத்தண்டு, துதிக்கை முதலான பொருள்களின் அழகை மட்டுமே கூறுகிறார். அந்தப் பொருள்கள் போன்று இவன் திருத்தொடைகள் உள்ளன என்று கூறவில்லை. ஆக பெரியபெருமாளின் திருத்தொடைகளுக்கு உவமை ஏதும் இல்லை எனலாம்.

119. கடீ காந்தி ஸம்வாதி சாதுர்ய நீவி
லஸத் ரத்ந காஞ்சீ கலாப அனுலேபம்
மஹாப்ரம் லிஹந் மேரு மாணிக்ய ஸானு:
இவ ஆபதி பீதாம்பரம் ரங்கபந்தோ:

பொருள் – (பெரியபெருமாளின் திருப்பீதாம்பரத்தைக் கூறுகிறார்) பெரியபெருமாளின் அழகான இடுப்பில் ஒளி வீசியபடி உள்ளது. அந்த ஒளியில் நன்கு பொருந்தியதாகவும், இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட மேகலை என்னும் ஆபரணத்தால் சூழப்பட்டதாகவும் அவனுடைய பீதாம்பர ஆடை உள்ளது. நீவி என்பது இடுப்பில் கட்டப்படும் உத்தரீயமாகும். இதனைக் காணும்போது நீர்மேகத்தை உட்கொண்டுள்ள மேருமலையின் தாழ்வரை போன்றுள்ளது.

120. பர்மஸ்தல அம்சு பரிவேஷ இவ அம்புராசே:
ஸந்த்யா அம்புவாஹ நிகுரம்பம் இவ அம்பரஸ்ய
சம்பா கதம்பகம் இவ அம்புமுச: மந: ந:
பீதாம்பரம் பிபதி ரங்கதுரந்தரஸ்ய

பொருள் – (பெரியபெருமாளின் திருப்பீதாம்பரத்தை மீண்டும் அனுபவிக்கிறார்) ஸமுத்திரத்தில் ஸந்த்யா கால நேரத்தில் விழுகின்ற தங்கமயமான பூமியின் ஒளி போன்று உள்ளது, ஆகாயத்தில் மாலை நேரங்களில் தோன்றுகின்ற மேகக்கூட்டங்கள் போன்று உள்ளது, மேகத்தில் தோன்றுகின்ற மின்னல் கூட்டங்கள் போன்று உள்ளது – இப்படியாக உள்ள பெரியபெருமாளின் திருப்பீதாம்பரம் நமது உள்ளத்தை அள்ளுகிறது.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 12)

### 3–2–21 ஸமாங்யாத்து

பொருள் – பொதுவான தன்மை காரணத்தால் ஆகும்.

ஸித்தாந்தம் (கடந்த சூத்திரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்குரியது) சூத்திரத்தில் உள்ள து என்ற பதம் பூர்வபக்ஷ வாதத்தைத் தள்ளுகிறது. பரமாத்மாவை ஸேது (அணை, பாலம்) என்று கூறுவதன் மூலம், பரமாத்மாவைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து ஒன்று உள்ளது என்று கூறுவது பொருந்தாது. இங்கு உள்ள ஸேது என்ற பதம் ஒரு கரையில் இருந்து மற்றொரு கரைக்குச் செல்ல உதவும் பாலம் என்ற உதாரணமாகக் கூறவில்லை. சாந்தோக்ய உபனிஷத் (8–4–1) – ஏஷாம் லோகாநாம் அஸம்போதாய – இந்த உலகங்கள் ஒன்றுடன் ஒன்று கலக்காமல் இருக்க – என்றது. நீரானது நிலத்தில் வந்து கலந்து விடாமல் தடுக்க உதவும் அணை போன்று, உலகங்கள் கலவாமல் இருக்க இவன் உள்ளான் என்பதை விளக்கவே ஸேது என்னும் பதம் கூறப்பட்டது. இது போன்று, சேதனம் மற்றும் அசேதனத்தைத் தன்னுள் வைத்து, அவை ஒன்றுடன் ஒன்று கலவாமல் காப்பதால் இவன் ஸேது எனப்பட்டான். மேலும், சாந்தோக்ய உபனிஷத் (8–4–2) – ஏதும் ஸேதும் தீர்த்வா – இந்த அணையைக் கடந்து – என்ற வரி மூலம் கூறப்பட்டது என்ன? தீர்த்வா என்ற பதம் அடைதல் என்ற பொருளில் வந்துள்ளது (பூர்வபக்ஷத்தில் கூறப்பட்டது போன்று தாண்டுதல் என்ற பொருளின் அல்ல). இதன் பொருள் வேதாந்தத்தைக் கடக்கிறான், முற்றிலும் அறிந்தவனாகிறான் என்பதாகும்.

### 3–2–32 புத்த்யர்த்த: பாதவத்

பொருள் – பாதம் போன்று உபாஸனத்திற்காகக் கூறப்பட்டது.

ஸித்தாந்தம் (சூத்திரம் 3–2–30ல் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) கீழே உள்ள உபனிஷத் வரிகளைக் காண்க:

- சாந்தோக்ய உபனிஷத் (3–18–2) – சதுஷ்பாத் ப்ரஹ்ம – ப்ரஹ்மம் நான்கு பாதங்கள் கொண்டது.
- ப்ரச்ன உபனிஷத் (6–1) – ஷோடசகலம் – ப்ரஹ்மம் பதினாறு கலைகள் கொண்டது.
- தைத்திரீய ஆரண்யகம் (3–10) – பாதோஸ்ய விச்வா பூதாநி – இவனது ஒரு பாதமே அனைத்து உயிர்களும்.

மேலே உள்ள பல வரிகளில் (ப்ரஹ்மத்தை அளவுபடுத்திக் கூறுவது போன்று உள்ள வரிகள்), புத்தியானது ப்ரஹ்மத்தைப் புரிந்து கொண்டு உபாஸிக்கும் பொருட்டு கூறப்பட்டவையாகும். ஜகத்காரணமாக உள்ள ப்ரஹ்மத்திற்கு அளவு கூற இயலாது என்பதை தைத்திரீயம் (2–1) – ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம – உண்மையானது, ஞானமயமானது, அளவிட இயலாதது ப்ரஹ்மம் – என்று தெளிவாகவே கூறியது. இத்தகைய ப்ரஹ்மமே உலகின் காரணமாக உள்ளது என்பதைக் கீழே உள்ள வரிகள் தெளிவாகக் கூறுகின்றன:

- தைத்திரீயம் (2–1) – தஸ்மாத்வா ஏதஸ்மாத் ஆத்மந: ஆகாச: ஸம்பூத: – இதிலிருந்து ஆத்மாவும் ஆகாசமும் வெளிப்பட்டது.

- தைத்திரீயம் (2–6) – ஸோகாமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேய – அது தன்னைப் பலவாகக் கடவது என்று எண்ணியது.

ஆகவே சாந்தோக்ய உபனிஷத் (3–18–2) – வாக் பாத: ப்ராண: பாத: சக்ஷு: பாத: – வாக்கு, பாதம், ப்ராணன், பாதம், கண், பாதம் – என்று கூறும் வரியில் உள்ள கருத்தான – வாக்கானது ப்ரஹ்மத்தின் பாதங்களாக உள்ளன – போன்ற கருத்துக்கள், உபாஸனை செய்வதை எளிதாக்கவே என்று அறிய வேண்டும்.

பூர்வபக்ஷம் – அளவிட இயலாத ஒரு பொருளை உபாஸனை பொருட்டு மாத்திரம் எப்படி அளவிட்டுக் கூற இயலும்? அடுத்த சூத்திரம் இந்தக் கேள்விக்கான விடையைத் தருகிறது.

### 3–2–33 ஸ்தாந விசேஷாத் ப்ரகாசாதிவத்

பொருள் – ஒளி முதலான ஸ்தானங்களின் ஸம்பந்தம் காரணமாக ஆகும்.

ஸித்தாந்தம் (கடந்த சூத்திரத்தின் இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) – ஒரு குறிப்பிட்ட இடம், வாக்கு என ப்ரஹ்மத்தை அளவுபடுத்திக் கூறியது உபாஸனையின் பொருட்டே ஆகும். எங்கும் உள்ள ஒளியானது ஜன்னல் வழியாக வரும்போது – ஜன்னல் ஒளி – என்று கூறப்படுவது போன்றும், எங்கும் உள்ள ஆகாயம் குடத்திற்குள் உள்ளபோது – குட ஆகாயம் – எனப்படுவது போன்றும் ஆகும்.

### 3–2–34 உபபத்தேச்ச

பொருள் – (தன்னை அடையும் உபாயமாகத் தானே உள்ள தன்மை) பொருந்துவதால்.

ஸித்தாந்தம் – நீங்கள் (பூர்வபக்ஷி) கூறும் முண்டக உபனிஷத் வரியான – அம்ருதஸ்யைஷ ஸேது – மோக்ஷத்திற்குப் பாலம் – என்பது, அடையப்பட வேண்டிய இடம் ஒன்று உள்ளது என்றும், அந்த இடத்திற்கு அழைத்துச் செல்லக்கூடிய ஒன்று உள்ளது என்றும், இவ்விதம் அழைத்துச் செல்லக்கூடியதைவிட அழைத்துச் செல்லப்படும் இடம் உயர்ந்தது என்றும் பொருள் தருவதாகக் கொள்ளக் கூடாது. இவ்விதம் மறுக்கக் காரணம் என்ன? அடையப்படும் மிகவும் உயர்ந்த இலக்காக பரமாத்மாவே உள்ளான் என்பதையும், அந்த இடத்தை அடைய உதவும் உபாயமாகவும் அவனே உள்ளான் என்பதையும் முண்டக உபனிஷத் தெளிவாகவே கூறுகிறது. அந்த வரியானது (3–2–3) – நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூம் ஸ்வாம் – இந்தப் பரமாத்மாவை கேட்பதன் மூலமோ, ஆழ்ந்த ஞானம் அல்லது அறிவு மூலமாகவோ அடைய இயலாது, இந்தப் பரமாத்மா யார் ஒருவனைத் தேர்ந்தெடுக்கிறானோ அவன் மட்டுமே பரமாத்மாவை அடைய இயலும், அந்த ஒருவனுக்கு மட்டுமே தனது ரூபத்தைப் பரமாத்மா வெளிப்படுத்துகிறான் – என்பதாகும்.

### 3–2–35 ததா அந்ய ப்ரதிசேஷாத்

பொருள் – இப்படியாக அதனைக் காட்டிலும் வேறு இல்லை என மறுப்பதால் ஆகும்.

ஸித்தாந்தம் – கீழே உள்ள வரிகள் மூலமாக ப்ரஹ்மத்தைக் காட்டிலும் உயர்ந்த வஸ்து ஒன்று உள்ளது என நீங்கள் (பூர்வபக்ஷி) கூறுகிறீர்கள்:

- ஸ்வேதாஸ்வதர உபனிஷத் (3–10) – ததோ யதுத்தரதரம் – இதனைவிட அப்பால் என்ன உள்ளது.

- முண்டக உபனிஷத் (3–2–8) – பராத்பரம் புருஷம் – உயர்ந்த இதனைவிட உயர்ந்த புருஷன்.

- முண்டக உபனிஷத் (2–1–2) – அக்ஷராத்பரத: பர: – அக்ஷரத்தைக் காட்டிலும் உயர்ந்தது.

ஆனால் இந்தக் கருத்து பொருந்தாது. ஏன்? நீங்கள் கூறிய உபனிஷத் வரியிலேயே உங்கள் கருத்துக்கள் மறுக்கப்படுகின்றன. நீங்கள் கைக்கொண்ட ஸ்வேதாஸ்வதர உபனிஷத் (3–9) – யஸ்மாத்பரம் ந அபரமஸ்தி கிஞ்சித் யஸ்மாத் ந அணீய: ந ஜ்யாயோஸ்தி கச்சித் – எந்தப் பரம்பொருளைக் காட்டிலும் மேலானது வேறு இல்லையோ, எதனைக் காட்டிலும் சிறியதும் பெரியதும் இல்லையோ – என்று கூறியது. ஆக இந்தப் பரம்பொருளைக் காட்டிலும் மேலானது ஏதும் இல்லை. இதே போன்று கீழே உள்ள பல வரிகளும் காண்க:

- ப்ருஹத் உபனிஷத் (2–3–6) – நஹ்யேதஸ்மாத் இதி நேதி அங்யத் பரமஸ்தி – இதனைவிட அப்பால் ஏதும் இல்லை, மேலானதும் ஏதும் இல்லை.

- நாராயணவல்லீ (1–2) – ந தஸ்ய ஈசே கச்சந தஸ்ய நாம மஹத்யச: இவனுக்கு ஈச்வரன் யாரும் இல்லை, இந்த உலகின் காரணம் அவனே என்பது ப்ரஸித்தம்.

- நாராயணவல்லீ (1–2) – ஸர்வே நிமேஷாஜஜ்ஞிரே வித்யுத: புருஷாததி – அனைத்துப் பொருள்களும் அந்தப் புருஷனிடமிருந்தே வருகின்றன.

- நாராயணவல்லீ (1–2) – ஸ ஆப: ப்ரதுகே உமே இமே – மின்னல் போன்ற பரமபுருஷன் இந்த இரண்டையும் (நீர், ஆகாயம்) படைத்தான்.

மேலும் நாராயணவல்லீ (1–3) – அத்ப்யஸ் ஸம்பூத: ஹிரண்யகர்ப்ப இத்யஷ்டௌ – ஹிரண்யகர்ப்பன் நீரிலிருந்து வெளிவந்தான் – என்ற வரி மூலம், பரமபருஷனே ஜகத்காரணம் என்று நினைவுபடுத்தப்பட்டது.

ஆக ஸ்வேதாஸ்வதர உபனிஷத் (3–10) – ததோயதுத்தரதரம் – இவனை விட உயர்ந்தது – என்று எதனைக் கூறியது என்ற கேள்வி எழலாம். விடை கூறுவோம். இந்த வரிக்கு முன்பாக (3–8) – வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸ: புரஸ்தாத் தமேவ விதித்வா அதிம்ருத்யுமேதி நாந்ய: பந்நா வித்யதே அயநாய – தமஸ் என்னும் ப்ரக்ருதி மணடலத்திற்கு அப்பால் ஜ்யோதிமயமான சரீரம் கொண்ட புருஷன் உள்ளான், அவனை உபாஸிப்பதால் மட்டுமே ம்ருத்யு என்னும் மரணம் கடக்கப்படும், அவனை அடைய வேறு உபாயம் இல்லை – என்று கூறப்பட்டது. இதன் மூலம் மிகவும் உயர்ந்த புருஷனும், ப்ரஹ்மமும் ஆகிய இதனைப் பற்றிய ஞானம் மட்டுமே ஒருவனுக்கு உபாயம் என்றும், வேறு ஓர் உபாயம் இல்லை என்றும் உணர்த்தப்பட்டது. இப்படியாக முழங்கிய முண்டக உபனிஷத், அதனைத் தொடர்ந்து (3–9) – யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித் யஸ்மாத் நாணீய: நஜ்யாயோஸ்தி கச்சித் வ்ருக்ஷ இவஸ்தப்த: திவி திஷ்டதி ஏக: தேநேதம் பூர்ணம் புருஷேந ஸர்வம் – எதனைக் காட்டிலும் உயர்ந்தது இல்லையோ, எதனைக் காட்டிலும் சிறியதும் பெரியதும் இல்லையோ, எது யாரையும் வணங்க வேண்டிய அவசியம் இன்றி மரம் போன்று நிற்கிறதோ, அந்தப் புருஷனால் இவை அனைத்தும் பரிபூர்ணமாக உள்ளன – என்று கூறியது. இதன் மூலம் அந்தப் புருஷனே உயர்ந்தவன் என்றும், அவனைக் காட்டிலும் உயர்ந்தது வேறு இருக்க இயலாது என்றும் கூறியது. இதனைத் தொடர்ந்து, இந்தக் கருத்தை நிறைவு செய்யும் விதமாக (3–10) – ததோ யதுத்தரதரம் தத் அரூபம் அநாமயம் ய ஏதத் விது: அம்ருதாஸ்தே பவந்தி அதேதர துக்கமேவ அபியந்தி – மேலே கூறியபடி மற்ற அனைத்தைக் காட்டிலும் மேலான புருஷ தத்துவமே உருவம் அற்றதாகவும் (கர்மசரீரம்), தோஷங்கள் அற்றதாகவும் உள்ளது, இதனை அறிந்தவர்கள் மோக்ஷம் பெறுகின்றனர், இதனை உபாஸிக்காதவர்கள் ஸம்ஸார துன்பத்தைப் பெறுகின்றனர்

– என்று கூறியது. ஆக அந்தப் புருஷனைவிட மேலானது ஏதும் இல்லை என்றும், அவன் கர்மசரீரம் அற்றவன் என்றும், தோஷங்கள் அற்றவன் என்றும், அவனை உபாஸனம் செய்பவர்களுகு மோக்ஷம் கிட்டும் என்றும், மற்றவர்கள் துன்பத்தில் ஆழ்வர் என்றும் கூறப்பட்டது. இப்படியாகப் பொருள் கொண்டால் மட்டுமே அதற்கு முந்தைய வரிகள் (3–8, 3–9) முரண்பாடு இல்லாமல் விளங்கும்.

மேலும் நீங்கள் (பூர்வபக்ஷி) கூறிய முண்டக உபனிஷத் (3–2–8) – பராத்பரம் புருஷம் உபைதி திவ்யம் – பரம்பொருளைவிட மேலான புருஷனை அடைகிறான் – என்ற வரியை எடுத்துக் கொள்வோம். இத்தகைய புருஷன் யார் என்பதை முண்டக உபனிஷத் (2–1–2) – அக்ஷராத்பரத: பர: – அக்ஷரத்தைக் காட்டிலும் மேலானவன் – என்று கூறியது. இந்தப் புருஷன் அனைத்து குணங்களும் கொண்டவன், நம்மால் சாதாரணக் கண்கள் கொண்டு காணப்பட இயலாதவன் என்று கூறி, அந்தப் புருஷனையே பராத்பர என்று நீங்கள் சுட்டிக் காட்டிய முண்டக உபனிஷத் வரி கூறியது.

**3–2–26 அநேந ஸர்வகதத்வம் ஆயாம சப்தாதிப்ய:**

பொருள் – ஆயாம என்ற பதம் மூலம் அனைத்தும் ப்ரஹ்மத்தால் வ்யாபிக்கப்பட்டுள்ளது எனலாம்.

பாஷ்யம் – அநேந என்றால் ப்ரஹ்மம், ஸர்வகதத்வம் என்றால் உலகம் அனைத்தும் வ்யாபிக்கப்பட்டு, ஆயாம சப்தாதிப்ய: என்றால் இப்படியாக வ்யாபிக்கப்பட்ட தன்மையைக் கூறும் பதம் மூலமாக – என்று பொருள் கொள்ளவேண்டும். எங்கும் வ்யாபித்துள்ள ஆயாம சப்தத்திற்கான ப்ரமாணங்கள் கீழே உள்ளன:

- ஸ்வேதாஸ்வதர உபனிஷத் (3–9) – தேநதம் பூர்ணம் புருஷேண ஸர்வம் – புருஷனால் உலகம் அனைத்தும் வ்யாபிக்கப்பட்டது.

- நாராயணவல்லீ (11–6) – யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர்ப்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: – இந்த உலகில் உள்ள பார்க்கின்ற, கேட்கின்ற பொருள்கள் அனைத்திலும், அவற்றின் உள்ளும் புறமும் நாராயணனே வ்யாபித்து நிற்கிறான்.

- முண்டக உபனிஷத் (1–1–6) – நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் யத்பூதயோநிம் பரிபச்யந்தி தீரா: – நித்யமாகவும், எல்லாமாகவும், எங்கும் உள்ளவன், சூட்சமமாக உள்ளவன், அனைத்தின் பிறப்பிடமாக உள்ளவன், அறிந்தவர்கள் இவனை எங்கும் காண்கின்றனர்.

சூத்திரத்தில் உள்ள ஆதி என்ற பதம் (சப்தாதிப்ய என்பதில் உள்ள ஆதி), ப்ரஹ்மத்திற்கு அனைத்துமாய் இருக்கும் பெருமையைக் கூறுகின்ற கீழே உள்ள வரிகளை உணர்த்துகிறது:

- ப்ருஹத் உபனிஷத் (4–5–1) – ப்ரஹ்மைவேதம் ஸர்வம் – ப்ரஹ்மமே அனைத்தும்.

- சாந்தோக்ய உபனிஷத் – ஆத்மைவேதம் ஸர்வம் – பரமாத்மாவே அனைத்தும்.

ஆக ப்ரஹ்மமே அனைத்தையும் விட உயர்ந்தது என்று நிரூபிக்கப்பட்டது.

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 12)

## காலத்தின் ஸ்வரூப, ஸ்திதி, ப்ரவ்ருத்தி பேதங்கள்

காலத்துக்கு ஸ்வரூபபேதம் ஜடமாய் விபுவாயிருக்கை. இதன் ஸ்திதி காலாவச்சேதமில்லாமையாலே நித்யையாயிருக்கும். இதின் ப்ரவ்ருத்திபேதம் கலாகாஷ்டாதி விபாகத்தாலே ஸ்ருஷ்ட்யாதிகளுக்கு உபகரணமாயிருக்கிறபடியிலே கண்டு கொள்வது.

விளக்கம் – காலத்தின் ஸ்வரூபம் என்பது தானே வெளிப்படாமல், எங்கும் பரவியதாய் இருப்பதாகும். காலத்தால் அளவுபடாத காரணத்தினால், என்றும் இருக்கும் தன்மையானது இதன் ஸ்திதி ஆகும். இதன் செயல்பாடு என்பது ஸ்ருஷ்டிக்கு உதவியாக இருத்தல், கலா (ஒரு முஹூர்த்தத்தின் 1/30 பகுதி), காஷ்ட (கலா என்பதின் 1/30 பகுதி) போன்றவையாக இருத்தல் முதலானவையாகும்.

இத்த்ரவ்யங்களெல்லாம் ஸ்வரூபேண நித்யங்களாயிருக்கும் நாமாந்தர பஜனார்ஹாவஸ்தா விசேஷ விசிஷ்டதையையிட்டுச் சிலவற்றை அநித்யங்க ளென்கிறது. அழிந்ததோடு ஸஜாதீயங்களான அவஸ்தாந்தரங்கள் மேலும் முழுக்க வருகையாலே ப்ரவாஹநித்யங்களென்று சொல்லுகிறது.

விளக்கம் – இந்த அனைத்து வஸ்துக்களும் அதன் ஸ்வரூபத்தினால் என்றும் இருக்கக்கூடியவையே ஆகும். இவை தங்களது நிலையை அவ்வப்போது மாற்றிக் கொள்கின்றன என்பதால், இவை தாற்காலிகமானவை என்றும் அழியக்கூடியவை என்றும் கூறப்படுகின்றன (நிலையை மாற்றுதல் என்றால் – பனிக்கட்டி நீராகுதல், நீர் ஆவியாதல் போன்றவை). இதனால் இவை புதுப்பெயர்களை எடுத்துக் கொள்கின்றன. புதிய நிலைகள் என்பவை, பழைய நிலைகள் அழிந்தவுடன் இடைவெளி இன்றித் தொடர்வதால், இவை நித்யம் என்றே கொள்ளப்படுகின்றன.

இப்பதார்த்தங்கள் எல்லாவற்றினுடையவும் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதங்கள் ஈச்வரனுக்கு ஸ்வாதீநங்களாயிருக்கையாவது ஈச்வரஸத்தையையும் ஈச்வரேச்சையையுமொழிய இவற்றுக்கு ஸத்தாதிகள் கூடாதொழிகை.

விளக்கம் – இந்த அனைத்து வஸ்துக்களின் ஸ்வரூபம் (தன்மை), ஸ்திதி (இருப்பு) மற்றும் ப்ரவ்ருத்தி (செயல்பாடு) ஆகிய மூன்றும் ஈச்வரனை நம்பியே உள்ளன. இதன் காரணம் – அவனுடைய இருப்பு இல்லாமல் இவை இல்லை, அவனுடைய விருப்பம் இல்லாமல் இவை இல்லை என்பதால் ஆகும்.

ஆகையால் ஸமஸ்த வஸ்துக்களுக்கும் ஸ்வபாவ ஸித்தானுகூல்யம் ஈச்வரேச்சாயத்தம். இத்தாலே ஈச்வரனுக்கும், நித்யருக்கும், முக்தருக்கும் ஸர்வமும் அனுகூலமாயிருக்கும். பத்தருக்குக் கர்மானுரூபமாகப் புருஷபேதத்தாலும் காலபேதத்தாலும் இவற்றில் ப்ராதிகூல்யங்களும் அல்பானுகூல்யங்களும் நடவாநிற்கும். இப்பத்தர் தங்களுக்கும் ஸ்வாத்மஸ்வரூபம் ஸர்வதா அனுகூலமாக ஈச்வரேச்சாஸித்தம். இப்படி அனுகூலமான ஆத்மஸ்வரூபத்தோடே ஏகத்வ

ப்ரமத்தாலும் கர்மவசத்தாலுமிறே ஹேயமான சரீரம் ஞானாஹீனருக்கு அனுகூலமாய்த் தோற்றுகிறது. இவற்றுக்குக் கர்மாபாதிகமான ப்ரதிகூலரூபத்தாலே முமுக்ஷுவைப் பற்ற த்யாஜ்யத்வம். ஸ்வாபாவிகமான அனுகூல ரூபத்தாலே முக்தனைப் பற்ற அவை தமக்கே உபாதேயத்வம். அஹங்கார மமகாரயுக்தனாய்க் கொண்டு தனக்கென்று ஸ்வீகரிக்குமவையெல்லாம் ப்ரதிகூலங்களாம். ஸ்வரூபஞானம் பிறந்து ஸ்வாமிசேஷமென்று காணப்புக்கால் எல்லாம் அனுகூலமாம். இவ்வர்த்தம் பரிபூர்ணப்ரஹ்மானுபவம் சொல்லுமிடத்திலே பரக்கச் சொல்லக்கடவோம்.

விளக்கம் – எனவே ஈச்வரனின் ஸங்கல்பம் காரணமாக, அனைத்து வஸ்துக்களும் தங்கள் இயல்பாகவே ஏற்கக்கூடியவைகள் என்று விளங்குகிறது. இதன் மூலம் அனைத்தும் ஈச்வரனுக்கு, நித்யஸூரிகளுக்கு, முக்தர்களுக்கு ஏற்புடையதாக உள்ளன என்று அறியலாம். ஆனால் ஸம்ஸாரத்தில் பிணைக்கப்பட்டவர்களுக்கு, அவரவர்களின் கர்மங்களுக்கு ஏற்ப ஒரு சில வஸ்துக்கள், ஒரு சில நேரங்களில் ஏற்புடையவையாகவும், மற்ற சில நேரங்களில் ஏற்க இயலாதவையாகவும் உள்ளன. ஆனால் ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்கும், ஈச்வரனின் விருப்பம் காரணமாக, அவரவர்களின் ஆத்மஸ்வரூபம் ஏற்புடையதாகவே உள்ளது. இப்படியாக ஆத்மா மட்டுமே ஏற்புடையதாக எண்ணப்படும்போது, ஒரு சிலருக்குத் தங்கள் கர்மம் காரணமாக, தங்களின் உடலே ஆத்மா என்ற எண்ணம் மேலிட, அதனால் உடலும் ஏற்கக்கூடியது என்ற சிந்தனை உண்டாகி, உடலின் மீது அபிமானம் வந்துவிடுகிறது. ப்ரக்ருதி மற்றும் அதன் மாறுபாடுகள் அனைத்தும் ஒருவனைக் கர்மத்தில் ஈடுபடுத்திவிடும் இயல்பு கொண்டதால், மோக்ஷத்தில் விருப்பம் கொண்ட ஒருவன் அவற்றின் மீது உள்ள பற்றுதல்களை விலக்கவேண்டும். ஆனால் முக்தன் ஒருவனுக்கு இவை ஏற்கக்கூடியதாக (எந்தப் பாதிப்பும் உண்டாக்காமல் உள்ளதாக) இருப்பதால், இவற்றை விலக்கவேண்டிய அவசியம் இல்லை. இவை அனைத்தையும் – நான், எனது – என்னும் எண்ணத்துடன் கைக்கொள்வது தவிர்க்கப்பட வேண்டியதாகும். இவை அனைத்தும் ஒருவனுக்கு எப்போது ஏற்கும்படியாக உள்ளது என்றால் – தன்னுடைய ஸ்வரூப ஞானத்தை உணர்தல், இவை அனைத்தும் எம்பெருமானுக்காகவே உள்ளன என்ற எண்ணம் இருத்தல் – என்ற நிலையில் ஆகும். இவை அனைத்தையும் ப்ரஹ்மத்தின் பூர்ணம் மற்றும் ஆனந்தம் பற்றிக் கூறும்போது விரிவாக விளக்குவோம்.

## ஈச்வர தத்துவம்

இப்படி ஸ்வாதீந ஸர்வஸத்தாதிகளையுடையவனாயிருக்கிற ஈச்வரனுடைய ஸ்வரூபம் ஸத்யத்வாதிகளாகிற ஸ்வரூப நிரூபக தர்மங்களாலே ஸத்யமாய், ஜ்ஞானமாய், அநந்தமாய், ஆனந்தமாய், அமலமாயிருக்கும். இவ்வர்த்தத்தை நந்தா விளக்கேயளத்தற்கரியாய் என்றும், உணர்முழுநலமென்றும், சூழ்ந்ததனிற் பெரிய சுடர்ஞானவின்பம் என்றும் அமலன் என்றும் இத்யாதிகளாலே ஆழ்வார்கள் அனுஸந்தித்தார்கள்.

விளக்கம் – இப்படியாக அனைத்தும் தங்களது இருப்பிற்குச் சார்ந்துள்ள ஈச்வரனின் ஸ்வரூபமானது ஸத்யம், ஞானம், அனந்தம் (எல்லையற்றது), ஆனந்தம், தூய்மை என்பதாகவே உள்ளது. இத்தன்மைகளை ஆழ்வார்கள் கீழே உள்ளபடி அனுபவித்தனர்:

- பெரிய திருமொழி (3–8–1) – நந்தா விளக்கே அளத்தற்கு அரியாய் – எப்போதும் அழியாமலும், அளவிடக் கடினமாகவும் உள்ளவனே
- திருவாய்மொழி (1–1–2) – உணர்முழு நலம் – ஆனந்தமும் ஞானமும் முழுமையாக உள்ளவன்
- திருவாய்மொழி (10–10–1) – சூழ்ந்ததனிற் பெரிய சுடர்ஞானவின்பம் – உயர்ந்தவற்றிலும் உயர்ந்தவன், ஞானமயமானவன், ஆனந்தமயமானவன்
- அமலனாதிபிரான் (1) – அமலன் – தூய்மையானவன், தோஷங்கள் அற்றவன்

மற்றுள்ள குணங்களும் திவ்ய மங்கள விக்ரஹாதிகளுமெல்லாம் ஈச்வரனுக்கு நிரூபித ஸ்வரூப விசேஷணங்களாயிருக்கும். இக்குணங்களில் ஞான பல ஐச்வர்ய

வீர்யம் சக்தி தேஜஸ்ஸுக்களென்று ஆறு குணங்கள் பரத்வோபயுக்தங்களாயிருக்கும். ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகள் ஸௌலப்யோபயுக்தங்களாயிருக்கும். இக்குணங்களெல்லாம் ஸர்வ காலத்திலும் ஸ்வரூபாஸ்ரிதங்களாயிருக்கும்.

விளக்கம் – அவனுடைய மற்ற குணங்கள், அவனுடைய திவ்யமங்கள விக்ரஹம் முதலானவை அவனது ஸ்வரூபத்தை நிரூபிப்பவையாக உள்ளன. இவற்றில் ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி மற்றும் தேஜஸ் ஆகிய ஆறு குணங்கள், இவனே பரத்வம் என்பதை பறைசாற்றும்படி உள்ளன. ஸௌசீல்யம், வாத்ஸல்யம் முதலானவை இவன் அனைவராலும் எளிதில் அணுகக்கூடியவன் என்பதை விளக்கும். இந்தக் குணங்கள் அனைத்தும் அவனது ஸ்வரூபத்தின் தன்மைகளாக எப்போதும், எந்தக் காலத்திலும் உள்ளன.

பர வ்யூஹாதி விபவங்களில் குணநியமம் சொல்லுகிறதெல்லாம் அவ்வோ ரூபங்களை அனுஸந்திப்பார்க்கு ஸர்வேச்வரன் ஆவிஷ்கரிக்கும் குணவிசேஷங்கள் சொல்லுகைக்காக வத்தனை. ஔபனிஷத் வித்யாவிசேஷங்கள்தோறும் அனுஸந்தேய குண விசேஷங்கள் நியதங்களானாற்போலே பகவச்சாஸ்த்ரோக்தமான ரூப விசேஷானுஸந்தானத்துக்கும் குணவிசேஷங்கள் நியதங்கள். அவ்விடத்தில் பரரூபத்தில் ஞானாதிகுணங்கள் ஆறும் வேத்யங்கள்.

விளக்கம் – இந்தக் குணங்களில் சில பர ரூபத்திலும், சில வ்யூஹ ரூபத்திலும், சில விபவ ரூபத்திலும் மட்டுமே வெளிப்படும் என்று கூறுவது ஏன் என்றால், எந்த ரூபத்தை உபாஸித்தாலும், அவர்களுக்கு அவன் தனது குணங்களைக் காட்டித் தருகிறான் என்று விளக்கவே ஆகும். உபனிஷத்தில் குறிப்பிட்ட வித்யை மூலம் ப்ரஹ்ம உபாஸனை செய்வது கூறப்படுவது போன்று, பாஞ்சராத்ர ஆகமத்தில், குறிப்பிட்ட பகவத் ரூபங்களில் குறிப்பிட்ட குணங்களை உபாஸிப்பது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அனைத்து ரூபங்களிலும் மேற்கூறிய ஆறு குணங்களும் வெளிப்படும்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

.........தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம் (பகுதி – 12)

**65. இத்தால், தனக்கும் பிறர்க்கும் உரித்தன்று என்கிறது.**

அவதாரிகை – ஈச்வரசேஷமான ஆத்மவஸ்துவுக்கு ஸ்வசேஷத்வ பரசேஷத்வங்களிரண்டும் அந்யசேஷத்வமாகையாலே உபயத்தையும் இவ்வுகாரம் கழிக்கிறதென்று சொல்லி நிகமிக்கிறார் இத்தால் தனக்கும் பிறர்க்கும் உரித்தன்றென்கிறது என்று.

விளக்கம் – எம்பெருமானுக்கு அடிமையாக உள்ள ஜீவாத்மாவிற்கு – தனக்குத் தானே வசப்படுதல், எம்பெருமானை அல்லாமல் மற்றவர்க்கு வசப்படுதல் ஆகிய இரண்டுமே, மற்றவர்களுக்கு அடிமையாக இருத்தல் என்பதையே காட்டுகிறது. இந்த இரண்டு நிலைகளையும் உ என்ற பதமானது நீக்குகிறது என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, அந்யசேஷத்வநிவர்த்தகமான இவ்வுகாரத்தாலே, அந்யரில் அந்யதமத்வம் அவிசிஷ்டமாகையாலே இவ்வாத்மவஸ்து தனக்கு உரித்தன்று, தன்னையொழிந்த ஸம்ஸாரிகளுக்கும் உரித்தன்று என்னுமிடம் சொல்லுகிறது – என்கை.

விளக்கம் – உகாரமானது ஜீவாத்மா மற்றவர்களுக்கு வசப்படுதலை தவிர்க்கிறது. இதன் மூலம் ஜீவாத்மா தனக்குத் தானே உடைமை அல்லன், தன்னை விட வேறுபட்ட மற்ற ஸம்ஸாரிகளுக்கு உடைமை அல்லன் என்பது கூறப்பட்டது.

**66. மகாரம், இருபத்தஞ்சாம் அக்ஷரமாய் ஜ்ஞாந வாசியுமாய் இருக்கையாலே, ஆத்மாவைச் சொல்லுகிறது.**

அவதாரிகை – ஆக, உகாரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று. அநந்தரம், த்ருதீயாக்ஷரமான மகாரார்த்தத்தை அருளிச் செய்கிறார் மகாரம் என்று தொடங்கி.

விளக்கம் – இதுவரை உகாரத்தின் பொருளை அருளிச் செய்தார். இனி மூன்றாம் அக்ஷரமான ம என்னும் எழுத்தின் பொருளை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது பூதாநி ச கவர்க்கேண சவர்க்கேண இந்த்ரியாணி ச டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா மந: பகாரேணைவோக்தம் பகாரேண த்வஹங்க்ருதி: பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதி: உச்யதே ஆத்மாது ஸ மகாரேண பஞ்ச விம்ச: ப்ரகீர்த்தித: என்றபடியே ப்ருதிவ்யாதி ப்ரக்ருத்யந்தமான இருபத்துநாலு தத்வத்துக்கும் வாசகமாயிருந்துள்ள ககாராதிபகாரந்தமான இருபத்துநாலு அக்ஷரமும் போலன்றிக்கே மகாரம் இருபத்தஞ்சாமக்ஷரமாய். மந ஜ்ஞாநே என்கிற தாதுவிலேயாதல், மநு அவபோதநே என்கிற தாதுவிலேயாதல் நிஷ்பந்நமாகையாலே, ஜ்ஞாநவாசியுமாயிருக்கையாலே. பஞ்சவிம்சோயம் புருஷ:, பஞ்ச விம்ச ஆத்மாபவதி என்கிறபடியே பஞ்சவிம்சகனாய், விஜ்ஞாநாத்மா புருஷ:,

விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத் என்கிறபடியே ஜ்ஞாநஸ்வரூபனுமாய் ஜ்ஞாநகுணகனுமாயிருக்குற ஆத்மாவைச் சொல்லுகிறது என்கை.

விளக்கம் – பாத்மோத்தர புராணம் – பூதாநி ச கவர்க்கேண சவர்க்கேண இத்ரியாணி ச டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா மந: பகாரேணைவோக்தம் பகாரேண த்வஹங்க்ருதி: பகாரேண பகாரேண மஹாந் ப்ரக்ருதி: உச்யதே ஆத்மாது ஸ மகாரேண பஞ்ச விம்ச: ப்ரகீர்த்தித: – க வர்க்கம் ஐந்தும் பஞ்சபூதங்கள், ச வர்க்கம் ஐந்தும் கர்மேந்திரியங்கள், ட வர்க்கம் ஐந்தும் ஞானேந்த்ரியங்கள், த வர்க்கம் ஐந்தும் பஞ்ச பூதங்களின் தன்மைகளான மணம் முதலியன, ப என்பது மனம், ப்ப என்பது அஹங்காரம், ப என்பது ப்ரக்ருதி, இருபத்து ஐந்தாம் தத்துவமான ஜீவன், இருபத்து ஐந்தாம் அக்ஷரமான மகாரம் மூலம் கூறப்படுகிறான் – என்று கூறியது. ஆக ம என்பது ப்ரக்ருதியின் 24 தத்துவங்களைக் குறிக்கும் க முதல் ப வரை உள்ள 24 எழுத்துக்களையும் விட மாறுபட்டு, 25–ஆவது அக்ஷரமாக உள்ளது. மேலும் – மன ஞாநே – என்கிற தொடரில் இருந்தோ அல்லது, மனு அவபோதநே என்கிற தொடரில் இருந்தோ ம என்னும் எழுத்து பிறந்ததால், அந்த எழுத்து ஞானமயமாக உள்ள ஆத்மாவைக் குறிக்கிறது எனலாம். ஆக ஆத்மாவானது, 25–ஆவது தத்துவம் என்பதைக் கீழே உள்ள வரிகளில் அறியலாம்:

- பஞ்ச விம்சோ அயம் புருஷ: – இந்த 25–ஆவது என்பது புருஷனாகும்.
- பஞ்ச விம்ச ஆத்மாபவதி – ஆத்மா 25–ஆவது தத்துவம்

மேலும் ஆத்மாவானது ஞானமயமாகவே உள்ளது என்பதும், ஞானத்தையே குணமாகக் கொண்டுள்ளது என்பதையும் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- ப்ரச்ன உபனிஷத் – விஜ்ஞாநாத்மா புருஷ: – ஜீவன் ஞானத்தை உடையவன்.
- ப்ருஹத் உபனிஷத் – விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத் – அதனை அதனுடைய ஞானம் என்ற குணம் கொண்டே அறியலாம்.

67. இதுதான் ஸமஷ்டிவாசகம்.

அவதாரிகை – கீழ்ச்சொன்ன சேஷத்வம் ஸர்வஸாதாரணமாகையாலே த்ரிவிதாத்மவர்க்கத்தையும் இதிலே சொல்ல வேண்டுமாகையாலே அருளிச்செய்கிறார், இதுதான் ஸமஷ்டிவாசகம் என்று.

விளக்கம் – இதுவரை கூறப்பட்ட அடிமைத்தனம் என்பது மூன்று வகையான ஆத்மாக்களுக்கும் (பத்தர், முக்தர், நித்யர்) பொதுவானது என்பதால் இந்த மூன்று ஆத்மாக்களையுமே மகாரம் குறிக்கிறது என்று கூற விரும்பி அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது இப்படி ஆத்மவாசகமான இம்மகாரந்தான் ஆத்மஸமஷ்டிக்கு வாசகம் என்கை.

விளக்கம் – ஜீவாத்மாவைக் குறிக்கும் ம என்பது, அனைத்து ஆத்மாக்களின் பிரிவையும் குறிக்கும்.

68. ஜாத்யேகவசநம்

அவதாரிகை – ஏகவசநம் ஸமஷ்டி வாசகமாமோ என்கிற சங்கையிலே அருளிச்செய்கிறார், ஜாத்யேகவசநம் என்று.

விளக்கம் – மேலும் ஒருமையில் உள்ள சொல், எவ்விதம் பன்மையாக உள்ள ஆத்மாக்களை குறிக்கும் என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, வ்ரீஹிஸமூஹத்தைச் சொல்லுகிறவன் இது ஒரு நெல் என்றால், அந்த ஏகவசநம் ஜாதிபரமானாற்போலே, இதுவும் ஆத்மஜாதிபரமான ஏகவசநம் என்கை.

விளக்கம் – ஒரு நெற்குவியலைப் பார்த்து ஒருவன் – இது ஒரு நெல் – என்று கூறும்போது, அந்தப் பதம் ஒருமையில் இருந்தாலும் நெல் என்னும் ஜாதியைக் குறித்ததால், நெற்குவியலையே குறிப்பதாகும். இதே போன்று ம என்னும் பதம், ஆத்ம ஜாதியைச் சேர்ந்த அனைத்து ஆத்மாக்களையும் குறிக்கும்.

69. இத்தால், ஆத்மா ஜ்ஞாதாவென்று தேஹத்தில் வ்யாவ்ருத்தி சொல்லிற்றாயிற்று.

அவதாரிகை – இம்மகரத்தால், ஆத்மாவினுடைய எவ்வாகாரஞ் சொல்லுகிறது என்ன, அருளிச்செய்கிறார் இத்தால் என்று தொடங்கி.

விளக்கம் – ம என்னும் எழுத்து ஆத்மாவின் எந்தத் தன்மையைக் குறிக்கிறது என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, பஞ்சவிம்சாக்ஷரமாய், ஜ்ஞாநவாசியுமாயிருந்துள்ள இம்மகாரத்தால், சேஷத்வாச்ரயமான ஆத்மா ஜ்ஞாநாச்ரயபூதனானவன் என்று அசேதநமான தேஹத்திற்காட்டில் ஆத்மாவின் வ்யாவ்ருத்தி சொல்லிற்றாயிற்று என்கை.

விளக்கம் – 25–ஆவது அக்ஷரமாகவும், ஞானத்தைக் குறிப்பதாகவும் உள்ள ம என்னும் எழுத்து – அடிமைத்தனத்திற்கு இருப்பிடமாக உள்ள ஆத்மாவானவன், ஞானத்திற்கும் இருப்பிடம் ஆவான் என்று விளக்குகிறது. இதனால் ம என்னும் எழுத்து, அசேதனமான உடலிற்கும், ஞானமயமான ஆத்மாவிற்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுகிறது எனலாம்.

70. தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வசேகரத்திலே சொன்னோம்.

அவதாரிகை – தேவோஹம், மனுஷ்யோஹம், ஸ்தூலோஹம், க்ருஸோஹம் என்று தேஹத்திலே அஹம்புத்தி வ்யவஹாரங்கள் நடவாநிற்க, அஹமர்த்தபூதனான ஆத்மா, தேஹத்தில் வ்யாவ்ருத்தனென்று சொல்லுகிறபடிதான் எங்ஙனே என்ன, அருளிச்செய்கிறார் தேஹத்தில் வ்யாவ்ருத்தி தத்வசேகரத்திலே சொன்னோம் என்று.

விளக்கம் – இந்த உலகில், நான் என்ற அர்த்தத்தை உடலிற்கு ஏற்றிக் கூறி – நான் தேவன், நான் மனிதன், நான் பருமன், நான் மெலியன் – என்று கூறுவதைக் காண்கிறோம். இப்படி உள்ளபோது, நான் என்பதற்கு விளக்கமாக, உடலைவிட மாறுப்பட்ட ஆத்மா என்பதை எவ்விதம் கூற இயலும்? இதற்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது அநேக ஹேதுக்களாலே தேஹத்தினுடைய அநாத்மத்வத்தை ஸாதியாநின்றுகொண்டு, ஆத்மாவினுடைய தத்வ்யாவ்ருத்தியைத் தத்வசேகரமாகிற ப்ரபந்தத்திலே வ்யக்தமாகச் சொன்னோம். அதிலே கண்டு கொள்வது என்கை.

விளக்கம் – பலவிதமான காரணங்களால் உடல் என்பது ஆத்மா அல்ல என்பதையும், ஆத்மாவானது உடலைவிட வேறுபட்டது என்பதையும், தத்வசேகரம் என்ற ப்ரபந்தத்தில் விரிவாகக் கூறினோம். அதில் கண்டு கொள்க.

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

## (பகுதி – 12)

(தடமால் வரை இத்யாதி) – ப்ரயோஜநாந்தரபரர் கார்யஞ்செய்தபடி சொல்லிற்றுக்கீழ், அநந்ய ப்ரயோஜநனான ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் முதலையின் கையிலே அகப்பட, அவனகப்பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத் தலை குலைய வந்து விழுந்து, அவன் விரோதியைப் போக்கி அவனபிமதம் செய்துகொடுத்தபடி சொல்லுகிறது மேல். (தடமால் வரைபோலும்) – தடம் என்றும் மால் என்றும் சொல்லுகையாலே, பருத்து உயர்ந்த மலைபோலே இருக்கிறவன். இப்பெருமை சொல்லுகிறது இங்கு என்னென்னில், பெரியது நோவுபட்டால் ஆற்றமாட்டாதென்கைக்காக. (போரானை) – யுத்தோந்முகனாய்த் திரிகிறானன்றிறே, செருக்காலே மலைகளோடே பொருது திரிகிறபடி.

விளக்கம் – (தடமால்) – பலனை விரும்பி இவனது திருவடிகளை அண்டிய தேவர்களுக்காக இவன் செய்த செயல்களை கீழே கூறினார். எந்தப் பலனையும் எதிர்பாராமல் நின்ற ஸ்ரீகஜேந்திரன், முதலையில் பிடியில் அகப்பட்டான். அப்படி இவன் சிக்குண்ட மடுவின் கரைக்கு, இடுப்பில் கட்டப்பட்டிருந்த பட்டாடை நழுவும்படியாகவும், அழகான கேசங்கள் கலையும்படியாகவும் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்து, அவனது விரோதியை அழித்து, அவனது கைங்கர்யத்தை ஏற்று, தன்னையே அளித்த விதத்தை கூறுகிறார். (தடமால்) – தடம் என்றும் மால் என்றும் கூறுவதால் பருத்த, உயர்ந்த மலையைப் போன்ற யானை எனக் கொள்ள வேண்டும். இங்கு யானையின் உடல் இத்தனை பெரியது என்று அதன் பெருமையை ஏன் கூற வேண்டும்? இத்தனை பெரிய உடல் கொண்ட யானைக்கு வேதனை வந்தால், அந்த வேதனை எத்தனை பெரியதாக இருக்கும் என்று விளக்கவே ஆகும். (போரானை) – மற்றவர்களுடன் ஸ்ரீகஜேந்த்ரன் தானாகவே சென்று போர் புரிய வல்லவன் என்று பொருள் கொள்ளக் கூடாது. தன்னுடைய மதம் காரணமாக மலைகளை முட்டியபடி நின்றதைக் கூறினார்.

(பொய்கைவாய்) – வெளி நிலமாகில் எதிரிகளைத் துணிக்குமிறே. தன்னிலமல்லாத நீர் நிலத்திலே. (கோட்பட்டு) – சத்ருவான முதலையின் கையிலே அகப்பட்டு. (நின்று) – அவன் நீருக்கு இழுக்க இவன் கரைக்கு இழுக்க, சில நாளெல்லாஞ்சென்று முதலையின் வ்யாபாரமேயாய்த் தன் வ்யாபாரமற்று நின்றபடி. (நீரார் மலர்க் கமலங்கொண்டோர் நெடுங்கையால்) – செவ்வி மாறாத தாமரைப்பூவைப் பிடித்த கையத்தனையுமொழிய நீரிலே அழுந்தினானாயிற்று. (நாராயணா ஓ) – ஸர்வ ஸ்வாமியானவனே என்றபடி. (மணிவண்ணா) – விடாய்த்தார்க்குத் தண்ணீர் வார்க்குமவனன்றோ நீ. இவ்வடிவை ஆசைப்பட்டார்க்குக் காட்டுமவனன்றோ நீ என்கை. (நாகணையாய்) – உன்னுடம்பை ஆசைப்பட்டார்க்குக் கொடுக்குமவனல்லையோ நீ என்றான். (வாராய்) – என்னுடைய ஆர்த்தி தீரும்படி அழகிய வடிவைப் பாரித்துக்கொண்டு இங்ஙனே எழுந்தருளவேணும். (என் ஆரிடரை நீக்காய்) – இப்போது இவன் ஆரிடர் என்கிறது, துக்க நிவ்ருத்தியைப் பண்ணாய் என்கிறானல்லன், இப்பூ செவ்வி மாறுங்காட்டில் திருவடிகளிலே இடுவித்துக் கொள்ளாயென்றபடி.

விளக்கம் – (பொய்கைவாய்) – தன்னுடைய இடமாக இருந்தால் எதிரிகளை அழிக்கும் வலிமை கொண்டவன், ஆனால் தனக்கு உரிமையான இடம் அல்லாத நீரில் அகப்பட்டான். (கோட்பட்டு) – எதிரியான முதலையின் வாயில் பிடிப்பட்டு. (நின்று) – முதலை இவனை நீருக்குள் இழுக்க, இவன் முதலையை கரைக்கு

இழுக்க, இப்படியே பல நாட்கள் கழிந்த பின், முதலை வெற்றி கொள்ள, தான் சக்தி அற்று நின்றான். (நீரார்) – மலர்ச்சி மாறாமல் இருந்த தாமரையை, தூக்கிப்பிடித்த தன்னுடைய துதிக்கை தவிர, தனது முழு உடம்பும் நீரில் மூழ்கிய நிலையில் நின்றான். (நாராயணா ஓ) – அனைவருக்கும் ஸ்வாமியானவனே. (மணிவண்ணா) – தாகம் எடுத்தவர்களுக்கு இதம் அளிக்கும் தண்ணீர் போன்று, இந்த உலகில் ஸம்ஸார துன்பத்தால் வருந்துபவர்களுக்கு உனது திருமேனியை அளிப்பவனே. அத்தகைய திருமேனியைக் காணும் விருப்பம் கொண்டவர்களுக்கு உனது திருமேனியைக் காண்பிப்பவன் அல்லவோ நீ. (நாகணையாய்) – உனது திருமேனியை அனுபவிக்கும் ஆசை கொண்ட ஆதிசேஷனுக்கு அதனை அளித்தவன் அல்லவா நீ. (வாராய்) – என்னுடைய துன்பம் அனைத்தும் நீங்கும் விதமாக, உனது அழகான திருமேனியுடன் இங்கு எழுந்தருளவேண்டும். (என்) – இவன் ஆரிடர் – பெரிய துன்பம் – என்று கூறுவது, தனக்கு நேர்ந்த துன்பத்தை விலக்க வேண்டும் என்பதற்காகக் கூறவில்லை, தான் கையில் பிடித்துள்ள தாமரையின் மலர்ச்சி மாறுவதற்குள்ளாக அவனது திருவடியில் அந்த மலரை அவன் சேர்த்துக் கொள்ளவில்லை என்றால், தனது கைங்கர்யம் தடைபட்டு விடுமே என்பதையே துன்பமாகக் கூறுகிறான்.

(என) – என்று இப்ரகாரத்திலே இவன் சொல்ல. (என வெகுண்டு) – ஸர்வேச்வரன் இவ்வார்த்தை செவிப்பட்டவாறே கோபித்தருளினான். (தீராத சீற்றத்தால்) – முதலையின் கையிலே அகப்படக்கொடுத்து, அகப்பட்டவன் நோவுபட்டதுக்குப் பின்பு அவனை ரக்ஷித்து என் செய்தோமானோம் என்று இன்னும் தீராதே கிடக்கிறதிறே. (சீற்றத்தால் சென்று) – வாஹநத்தின் மேலன்று போலே காணும் சென்றது, கோபம் வழிகாட்டச் சென்றானித்தனை, தானறிந்து சென்றானன்று காணும். (இரண்டு கூறாக ஈரா) – ஆனைக்கும் நோவு வராமல் முதலையை ஒரு பிளவாம்படி திருவாழியாலே பிளந்தருளினபடி. (அதனை இடர் கடிந்தான்) – அப்படி நோவுபட்டிருக்கிற ஸ்ரீகஜேந்திராழ்வானை, அம்முதலை பிடித்த ஸ்ரீபாதத்தைத் தன் திருக்கைகளாலே ஒத்துவதானான், திருப்பவளத்தாலே ஊதுவதும் திருப்பரிவட்டத் தலையாலே ஒத்துவதானான். (எம்பெருமான்) – ஸ்ரீகஜேந்திராழ்வானுக்கன்றிக்கே இவள் தான் பெற்றாளாம்படி தோற்ற இக்கட்டுவிச்சி என் நாயனே என்கிறாள்.

விளக்கம் – (என) – இப்படி அந்த யானை கூற (என வெகுண்டு) – இந்தச் சொற்கள் தன்னுடைய திருச்செவியில் விழுந்தவுடன் ஸர்வேச்வரனுக்கு மிகுந்த கோபம் உண்டானது. (தீராத சீற்றத்தால்) – ஏன் கோபம் என்றால், இந்த யானை முதலையின் பிடியில் அகப்படும்வரை நான் இருந்து விட்டு, அவன் அகப்பட்டபின், அவனுக்குத் துன்பம் உண்டான பின், அவனைக் காத்து என்ன பயன் – என்று எண்ணியதால் ஆகும். (சீற்றத்தால்) – இவன் சென்றதைக் கண்டால் கருடவாகனத்தின் மீது செல்லவில்லை போலும், கோபத்தையே வாகனமாகக் கொண்டு சென்றது போல் இருந்தது. தானாகவே கஜேந்திரன் உள்ள இடம் அறிந்து செல்லவில்லை, இவனது கோபம் வழிகாட்ட, அதனைத் தொடர்ந்து சென்றான். (இரண்டு கூறாக ஈரா) – யனைக்கு எந்தப் பாதிப்பு வராமல், முதலையை இரண்டாகப் பிளக்கும்படித் தனது திருச்சக்கரத்தை விடுத்தான் (அதனை இடர் கடிந்தான்) – இவ்விதமாகத் துன்பப்பட்ட கஜேந்திரனை, அந்த முதலை பிடித்திருந்த கஜேந்திரனின் திருவடியைத் தனது திருக்கைகளால் ஒற்றிக் கொடுத்தான். தனது திருவாயால் மெதுவாக ஊதினான், மென்மையான தனது திருபரிவட்டத்தை அவிழ்த்து, அதன் தலைப்பால் ஒற்றிக் கொடுத்தான். (எம்பெருமான்) – இப்படி கஜேந்திரன் பெற்ற பேற்றை இந்தக் கட்டுவிச்சி, தானே பெற்றதாக எண்ணி, என் அப்பனே என்று கூறினாள்.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருமாலை
(பகுதி – 2)

திருநாமத்தில் இவர் இழிகைக்கடி ஸ்ரீவிஷ்ணுதர்மம். அது தனக்கு வக்தா ஆர்? ச்ரோதா ஆர்? அது விளைந்தபடி எங்ஙனே? என்றால் பாண்டவர்களுக்கு இவ்வருகே நாலைந்து தலைமுறை சென்றவளவிலே சதாநீகன் என்பானொரு ராஜாவுளனாய், அவன் பகவத்விஷயீகாரமுள்ள ஸந்தாநத்திலே பிறந்தானொருவனாகையாலே பரமஸத்விகனாய், அபிஷிக்தனானவன்றே தொடங்கிச் சிறியதைப் பெரியது நலியாதபடி நாட்டை ரக்ஷித்து – அத்ருஷ்ட சேஷமாக இவர்களுக்கு நம்மால் செய்யலாவதென்? – என்று ஸ்ரீசௌநக பகவான் பக்கலிலே சென்று – தேஹபோஷணபரராய் மூலையடியே திரிகிற ஸம்ஸாரிகளுக்கு உஜ்ஜீவநோபாயமாயிருப்பதொன்று அருளிச் செய்யவேணும் – என்று கேட்க, காலம் கலிகாலமாயிருந்தது, பாபப்ராசுர்யத்தாலே வேறொன்றுக்கு அதிகாரிகளில்லை, ஸர்வாதிகாரமான பகவந்நாம ஸங்கீர்த்தனமே ஆத்மாக்களுக்கு உஜ்ஜீவநோபாயமாயிருப்பது என்று அருளிச்செய்தான்.

விளக்கம் – இந்த ஆழ்வார் திருநாம ஸங்கீர்த்தனத்தில் ஈடுபடுவதற்கு விஷ்ணுதர்மமே காரணமாக இருந்தது. அந்தக் க்ரந்தம் யாரால் கூறப்பட்டது? அது யாரால் கேட்கப்பட்டது? எவ்விதம் அது தோன்றியது? பாண்டவர்களுக்குப் பின்னர், நாலைந்து தலைமுறைகள் கழிந்தன. அப்போது அந்த வம்சத்தில் சதாநீகன் என்னும் அரசன் தோன்றினான். கண்ணனின் தொடர்புடைய பாண்டவ குலத்தில் அவன் பிறந்ததால், மிகவும் ஸாத்வீகனாக இருந்தான். தனது சிற்றரசர்கள் தன்னை விட வலிமை குறைவானவர்களாக இருப்பின், அவர்களை வருத்தாமல் ஆண்டு வந்தான். தனது நாட்டு மக்களுக்கு என்ன செய்வது என்று யோசித்தான். அதற்கான விடையை அறிய ஸ்ரீசௌநக முனிவரிடம் சென்றான். அவரிடம் – தங்களின் உடலைப் பேணுவதிலேயே காலத்தைக் கடத்தும் ஸம்ஸாரிகளுக்கு உய்யும் வழியானது என்ன என்று கூறவேண்டும் – என்று கேட்டான். அதற்கு அந்த முனிவர் – இது கலிகாலமாகும், பாவங்கள் அதிகமாக உள்ளதால், ப்ரபத்தி முதலானவற்றை இயற்றும் தகுதி யாருக்கும் இல்லை, ஆகவே அனைவருக்கும் பொருத்தமாக உள்ளது பகவன் நாம ஸங்கீர்த்தனமே ஆகும், இது மட்டுமே ஜீவாத்மா உய்யும் வழியாகும் – என்றார்.

அங்கு ஸ்ரீசௌநகபகவான் வக்தா, சதாநீகன் ச்ரோதா. இங்கு ஆழ்வார் வக்தா, பெரியபெருமாள் ச்ரோதா. அங்கு அஜ்ஞாத ப்ரச்நம், இங்கு ஜ்ஞாத ப்ரச்நம். ஜ்ஞாதம் ப்ரச்ந விஷயமாவானென் என்னில் கிம் ம்ருஷ்டம் ஸுதவசநம் என்கிறபடியே, ஆழ்வார் வாயாலே திருநாம வைபவத்தை அருளிச்செய்யக் கேட்கையிலுண்டான ப்ரீதியாலே.

விளக்கம் – விஷ்ணுதர்மத்தைப் பொறுத்தவரையில் ஸ்ரீசௌநக முனிவர் அதனைக் கூறினார், சதாநீகன் கேட்டான். இங்கு திருமாலையைப் பொறுத்தவரை ஆழ்வார் அருளிச்செய்தார், பெரியபெருமாள் கேட்டான். அந்த அரசன் தனக்கு ஞானமில்லாத காரணத்தினால், அறியாமை நீங்கக் கேட்டான், இங்கு அனைத்தும் அறிந்துகொண்டே பெரியபெருமாள் கேட்டான். தெரிந்த விஷயத்தையே ஏன் கேட்க வேண்டும்? கிம் ம்ருஷ்டம் ஸுதவசனம் – எது இனிமையானது என்றால் குழந்தைகளின் பேச்சே ஆகும் – என்பதற்கு ஏற்ப, தன்னுடைய குழந்தையான

ஆழ்வாரின் சொற்கள் மூலமாகவே, தன்னுடைய திருநாம மேன்மைகளைக் கேட்க ஆவல் கொண்டான்.

இன்னமும் இவ்வாழ்வாருக்கு பகவத்விஷயத்தை ப்ரகாசிப்பிக்கிற ச்ருதிகளிலும் வேதோபப்ரும்ஹணம் பண்ணின ரிஷிகளிலும், அல்லாத ஆழ்வார்களிலும் நெடுவாசியுண்டு, எங்ஙனேயென்னில் யதோ வா இமாநி பூதாநி இத்யாதி வாக்யங்களாலே ஜகஜ்ஜந்மஸ்திதிலய ஹேதுவான ஜகத்காரணவஸ்துவைச் சொல்லி, காரணந்து த்யேய: என்கிறபடியே அதுவே உபாஸ்யமென்று இவ்வளவாலே த்யேயவஸ்துவைச் சொல்லி, ஸத் ப்ரஹ்ம ஆத்மா இத்யாதி ஸாமாந்யவாசி சப்தங்களுக்கு விசேஷாகாங்க்ஷை உண்டாகையாலே, ஸ்ருஷ்டி வாக்யகதி ஸாமாந்ய ந்யாயத்தாலே, ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் என்று விசேஷித்தது, இவ்வளவாய்த்து ச்ருதி சொல்லிற்று, வேதோபப்ரும்ஹணம் பண்ணின ரிஷிகள், அஜாயமானோ பஹுதா விஜாயதே என்கிற ச்ருத்யுபப்ரும்ஹணமான இதிஹாஸபுராணமுகத்தாலே திருவவதாரங்களை ப்ரகாசிப்பித்தார்கள், அதில் ஸ்ரீவால்மீகி பகவான் ராமாவதாரத்திலே மண்டினான், ஸ்ரீபராசர பகவான் க்ருஷ்ணாவதாரத்திலே மண்டினான், ஸ்ரீசௌநக பகவான் அர்ச்சாவதார வைபவத்தை, தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் பஜேத் தாம் விசிந்தயேத் இத்யாதிகளிலே ப்ரகாசிப்பித்தான். ஆழ்வார்களிலே முதலாழ்வார்கள் மேன்மைக்கு எல்லையான பரத்வத்திலும், நீர்மைக்கெல்லையான திருமலையிலும் மண்டினார்கள், நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் க்ருஷ்ணாவதாரத்திலே ஊன்றியிருப்பார்கள், திருமங்கையாழ்வார் உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் மண்டினார், அர்ச்சாவதார ஸாமாந்யமுமன்றிக்கே பெரியபெருமாளையல்லது வேறு அறியாதிருப்பாரொருவராய்த்து இவர்.

விளக்கம் – பகவத்விஷயங்களை ப்ரகாசமாக உலகினருக்கு வெளிப்படுத்தும் ச்ருதிகளை விளக்கிய ரிஷிகள் மற்றும் ஆழ்வார்கள் ஆகியோரைக் காட்டிலும், இந்த ஆழ்வாருக்கு அதிகச் சிறப்பு உண்டு. எப்படி? தைத்திரீயம் – யதோ வா இமாநி பூதாநி – எந்த ஒன்றிடமிருந்து அனைத்தும் தோன்றினவோ – என்று, அனைத்து பொருள்களின் இருப்பு (ஸ்திதி) மற்றும் லயம் ஆகியவற்றின் காரணமானதும், இந்த உலகின் காரணமானதும் ஆகிய ப்ரஹ்மத்தைப் பற்றிக் கூறத் தொடங்கியது, மேலும் – காரணந்து த்யேய: – அந்தக் காரண வஸ்து மட்டுமே த்யானிக்க ஏற்றது – என்று, அதனையே உபாஸனைக்கு ஏற்ற பொருளாகக் கூறியது. ஸத், ப்ரஹ்மம், ஆத்மா என்னும் பதங்கள் இட்டு, இந்தப் பதங்கள் எதனைக் குறிக்கின்றன என்று சந்தேகம் எழும்படிச் செய்தது. இந்த ஐயத்தை நீக்கும் விதமாக மஹோபனிஷத் – ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் – நாராயணன் மட்டுமே இருந்தான் – என்று தெளிவாகக் கூறியது. இப்படியாக ச்ருதிகள் முழங்கின. புருஷஸூக்தத்தில் – அஜாயமானோ பஹுதா விஜாயதே – பிறப்பற்றவனாக உள்ளபோதிலும் பலவாகப் பிறக்கிறான் – என்று கூறிய வேதவரிக்கு ஏற்றபடியுள்ள அவனது அவதாரங்களை, பல ரிஷிகளும் இதிகாசம் மற்றும் புராணங்களில் விளக்கினர். இப்படிப்பட்ட ரிஷிகளின் ஸ்ரீவால்மீகி இராமாவதாரத்திலும், ஸ்ரீபராசரர் க்ருஷ்ணாவதாரத்திலும் ஈடுபட்டனர். ஸ்ரீசௌநகர் விஷ்ணுதர்மத்தில் – தாம் அர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் பஜேத் தாம் விசிந்தயேத் – அதனை வணங்கவும், அர்ச்சிக்கவும், பஜனம் செய்யவும், சிந்திக்கவும் கடவன் – என்று கூறியபடி, அர்ச்சாவதாரத்தின் மேன்மையை வெளிப்படுத்தினார். மேன்மைக்கு எல்லையாக உள்ள பரத்வத்தை விளக்குவதும், நீர்மைக்கு எல்லையாக உள்ள நிலையை விளக்குவதும் ஆகிய திருமலையில் முதலாழ்வார்கள் நிலைநின்றனர். நம்மாழ்வரும், பெரியாழ்வாரும் க்ருஷ்ணாவதாரத்திலேயே ஈடுபட்டு நின்றனர். எம்பெருமான் அர்ச்சையாக எங்கெல்லாம் உள்ளானோ அங்கெல்லாம் திருமங்கையாழ்வார் மனம் பறிகொடுத்தார். ஆனால், அர்ச்சாவதாரத்திலே மிகவும் சிறப்புள்ள பெரியபெருமாளிடம் மட்டுமே மனம் பறிகொடுத்து, அவனை அல்லாது வேறு எதனையும் அறியாமல் இருக்கும் சிறப்பு இந்த ஆழ்வாருக்கு மட்டுமே உள்ளது.

அர்ச்சாவதார ஸாமாந்யத்திற்காட்டில் கோயிலுக்கு ஏற்றமென் என்னில், காவேரியானது ப்ரவாஹமும் ஏகரூபமாய், ஸ்தலமும் அதுவாயிருக்கச்செய்தே தீர்த்தவிசேஷங்களிலே ரஸவிசேஷங்களுண்டாகிறாப்போலே, போக்யதாதிசயத்தால் வந்த ஏற்றம் வேறொரு இடத்துக்கு இல்லை, அல்லாதாரில் இவர்க்கு உண்டான ஏற்றம்போலே ப்ரபந்தாந்தரங்களிற்காட்டில் இப்ரபந்தத்துக்கு நெடுவாசியுண்டு, எங்ஙனே என்னில் நீராய் நிலனாய் என்று தொடங்கி, சிவனாய் அயனானாய் என்று

சேதநாசேதநவாசி சப்தங்களாலே ஈச்வரனைச் சொல்லுகிற இந்த ஸாமாநாதிகரண்யத்துக்கு, அனுப்ரவேசக்ருதம் ஸாமாநாதிகரண்யம் என்று நிர்வஹிக்கவேண்டும் அருமையாதல், முனியே நான்முகனே முக்கண்ணப்பா என்று தோற்றுகிற த்ரிமூர்த்தி ஸாம்யத்தை நிர்வஹிக்கவேண்டும் அருமையாதல், இன்னமும் சப்தத்தில் அருமையாலே ஸ்வார்த்தத்தை அறிகைக்கு அருமைப்பட வேண்டுதல் செய்யும் இக்குறைகள் ஒன்றுமின்றிகே இருக்கையும், இன்னமும் – கடல் பேராழமாயிருக்கச்செய்தேயும் நீர்த்தெளிவாலே தரைதோற்றுமாபோலே, சப்தத்தின் செவ்வாயாலே ப்ரமேயம் கனத்திருக்கச் செய்தேயும் உள்ள தடங்கத் தோற்றும்படி இருக்கையும், இன்னமும் ப்ரணவம் போலே சப்தம் அத்யல்பமாய் அர்த்தக்ரஹணம் அரிதாயிருத்தல், இவ்விரண்டு குறையுமின்றிக்கே ஒரு சேதனனுக்கு ஜ்ஞாதவ்யங்களை பரந்த சடங்குகளை சுருங்க ப்ரயோகவ்ருத்தி செய்து கொடுத்தாற்போலே ஸகலார்த்தங்களும் இப்ரபந்தத்துக்குள்ளே உண்டாகையாலும் ப்ரபந்தாந்தரங்களிற்காட்டில் இப்ரபந்தத்துக்கு நெடுவாசி உண்டு.

விளக்கம் – பல அர்ச்சாவதார ஸ்தலங்கள் உள்ளபோது, பெரியகோயிலுக்கு மட்டும் உள்ள சிறப்பு என்ன? காவேரியானது ஒரே வேகத்துடன் ஒரு ஊருக்குள் செல்லும்போது, குறிப்பிட்ட படித்துறையில் செல்வதால் விசேஷம் பெறுகிறது அல்லவா? இது போன்ற பெரியகோயிலில் உள்ள இனிமை என்பது மற்ற திவ்யதேசங்களில் இல்லை. மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் இவருக்கு உள்ள சிறப்பு போன்று, மற்ற ப்ரபந்தங்களுக்கு இல்லாத சிறப்பு, இந்தப் ப்ரபந்தத்துக்கு உண்டு. அது என்ன? திருவாய்மொழியில் (6–9–1) – நீராய் நிலனாய் என்று தொடங்கி சிவனாய் அயனானாய் என்று கூறும்போது, சேதன அசேதனங்களைக் கூறும் சொற்களின் நடுவில், அதே போன்று ஈச்வரனையும் சொல்லும்படி உள்ளது, சேதன அசேதனங்களின் அந்தர்யாமியாக இவன் உள்ளான் என்று அவற்றை முன்னிட்டே கூறும்படி உள்ளது, திருவாய்மொழி (10–10–1) – முனியே நான்முகனே முக்கண்ணப்பா – என்று கூறும்போது சாதாரண மக்கள் இதனை மூன்று மூர்த்திகளும் ஒன்று என ஆழ்வாரே கூறுகிறார் என்ற கருத்து உண்டாகி விடுகிறது, இதனால் பல ப்ரமாணங்களைக் கொண்டு, அந்தப் பாசுரத்தில் மற்ற இரண்டு மூர்த்திகளுடன் கூறப்பட்ட விஷ்ணுவை நாராயணனின் அவதாரமே என்று நிரூபிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த விஷயங்களின் உட்பொருள்கள் பல பாமரர்களுக்கு விளங்குவதும் சிரமமாக உள்ளது. இவற்றைப் போன்ற குறைகள் இந்தப் ப்ரபந்தத்துக்கு ஏதும் இல்லை. கடலானது ஒரு சில இடங்களில் மிகவும் ஆழமாக உள்ளபோதிலும், அந்த இடங்களில் உள்ள நீரானது தெளிவாக இருந்தான் தரை தெரிவதைக் காணலாம். இது போன்று திருமாலையில் உள்ள சொற்கள் கம்பீரமாக உள்ளபோதிலும், அவற்றின் அர்த்தங்கள் மிகவும் எளிமையாக, அனைவரும் உணரும்படி உள்ளன. மேலும் ஓர் உதாரணம் – ப்ரணவம் என்பது கற்பதற்கு மிகவும் சுருக்கமாக உள்ளபோதிலும், அதன் பொருளை உனர்வது மிகவும் கடினமாக உள்ளது, இதே போன்று மஹாபாரதம் மிகவும் பெரியதாக உள்ளபோதிலும், அதன் தத்துவம் அறியக் கடினமாக உள்ளது. இவை போன்று சுருக்கமாகவும், விரிவாகவும் உள்ளது என்னும் தோஷம் இல்லாமக் திருமாலை காணப்படுகிறது. ஒரு சேதனனுக்கு, அவன் அறிந்து கொள்ளவேண்டிய பல விஷயங்களை, சில சாஸ்த்ரங்கள் சுருக்கமாகக் கொடுப்பது போன்று, பல விசேஷ அர்த்தங்கள் இந்தப் ப்ரபந்தத்தில் உண்டு. மேற்கூறிய பல காரணங்களால் இந்தப் ப்ரபந்தத்துக்கு மற்ற ப்ரபந்தங்களைக் காட்டிலும் மேன்மை மிகவுண்டு.

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான அவதாரிகை சுபம்

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்